**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.314/2020**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | மதியழகன் | Prosecution | LW-5 as PW-4 |
| Father Name | அருணாசலம் | Defence | |
| Village | உடையாம்பள்ளம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 59/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **19.09.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரில் வசித்து லோடு மேன் வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், அவர்கள் எனது உறவினர்கள் ஆவர். இந்த வழக்கு அசா.1 முதல் 3 வரையிலானர்களை எனக்கு தெரியும் அவர்கள் எனது பக்கத்துவீட்டுகாரர்கள் ஆவர். இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சண்டை நடந்த போது நான் சம்பவ இடத்தில் இல்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பு சாட்சி பிறழ் சாட்சியாக மாறியதால் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் என் பெரிப்பா மகனின் பேரன்கள் ஆவார்கள். அசா.1 முதல் 3 வரையிலாவர்களை சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு நான் தான் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். அதில் விமலா தேவியை நான் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்றேன் என்றால் சரிதான். எதிரிகள் எனது உறவினர்கள் என்பதால் உண்மையை மறைத்து அவர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மருத்துவ மனையில் வழங்கப்பட்ட விபத்து பதிவேட்டில் நான் தான் அவர்களை மருத்துவ மனைக்கு அழைத்து சென்றதற்கான குறிப்புகள் உள்ளது என்றால் நான் தான் பாப்பாவை வண்டியில் வைத்து மருத்தவமனைக்க அழைத்து சென்றேன். ஆனால் சண்டை யின் போது நான் இல்லை. அந்த பாப்பாவிற்கு (அசா.3) எதனால் காயம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்தது. மருத்துவ

மனையில் மேற்படி நபரின் சகோதரர் மற்றும் தாயாரை நான் பார்த்தேனா என்றால்பார்த்தேன் அந்த சகோதரர்கு எங்கு அடிபட்டிருந்துது என்றால் அவருக்கு விரலில் காயம் ஏற்பட்டிருந்தது. அவரது அம்மாவிற்கு எங்கு காயம் என்று எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரித்த போது நான் வழக்கு சம்பவத்தை பார்த்தாக சொல்லிவிட்டு, காயம் பட்டவர்களை காப்பாற்றி மருத்துவ மனைக்கு அழைத்து சென்றதாக சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை**

நான் சம்பவத்ததை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் விமலா தேவியை மட்டும் தான் பார்த்தேன் என்றாலும் அவரது சகோதரர் மற்றும் தாயை பார்க்கவில்லை என்றாலும் தவறு அவர்களையும் நான் பார்த்தேன். போலிசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார் கொடுத்தவர்களும் எதிரிகளும் ராசியாகி தற்போது ஊருக்குள் பேச்சு வார்த்தையில் தான் உள்ளார்கள் என்றால் சரிதான்.

**மறுவிசாரணை இல்லை.**